DEPOSITION OF WITNESS

அரக்கோணம் குற்றவியல் நடுவர் எண்.1 நீதிமன்றம் 2025 ஆம் ஆண்டு ஜீன் மாதம் திங்கள்கிழமை 09ம் நாள் சாட்சியாகிய முபாரக் என்பவரின் வாக்குமூலம் 1983 ஆம் ஆண்டு 10வது சட்ட விதியின்படி திருமதி. K.மம்தா Gr-III பென்ச் கிளார்க், என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | முபாரக் | வயது | 43 |
| த/பெ. | சாகுல்அமித் | இனம் | ஆண் |
| கிராமம் | அரக்கோணம் | தொழில் | சொந்த தொழில் |
| சமயம் | | தாலூக்கா | |

**C.C.15/2025**

(எதிரி நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை. எதிரி சார்பாக குவிமுச பிரிவு 317ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. எதிரி வழக்கறிஞர் நீதிமன்றத்தில் ஆஜர்).

**முதல் விசாரணை 09.06.2025 அ.சா.1**

1. நான் அரக்கோணத்தில் வசித்து வருகிறேன். 03.02.2025ம் தேதி காலை 8 முதல் 8.30 மணிக்கு கிருஷ்ணாம்பேட்டையில் உள்ள அரசு பெண்கள் மேல்நிலைபள்ளிக்கு எனது மகள் பாத்திமாவை விடுவதற்காக சென்றேன். பள்ளி கேட் வாசலில் நபர் ஒருவர் ஆபாசமாக மதுபோதையில் படுத்துக்கொண்டிருந்தார். அவரை தட்டி கேட்டபோது என்னை தவறான வார்த்தையால் பேசினார். அங்கு சென்றவர்களையும் அசிங்கமான வார்த்தைகளால் பேசினார். என்னை ஒழித்துவிடுவேன் என்று மிரட்டினார். இது சம்மந்தமாக நகர காவல் நிலையத்திற்கு நான் தகவல் கொடுத்தேன். அந்த நபரின் பெயர் முரளி என்று சொன்னார்கள். என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அது நான் கொடுத்த புகார். **(புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலீசார் என்னை விசாரித்தனர்.

(அரசு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க முதல் விசாரணை தொடர்ச்சி வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது).

Taken down by me/before me
in Open Court,
Interpreted/read over
to the witness and admitted by
the deponent to be correct.

Judicial Magistrate No.I,
Arakkonam.